# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## CC.No. 12/2024

## வழக்கு சாட்சி PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **தமிழரசி** | தொழில் | : செவிலியர் |
| தகப்பனார் பெயர் | : ——————— | கணவர் பெயர் | : அந்தோனி ராஜ் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 48/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மருத்துவர் செல்வக்குமரனை எனக்குத் தெரியும் . ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் பண்ணைக்காட்டைச் சேர்ந்தவர். தேதி நினைவில்லை. கடந்த 2023ம் வருடம் ஜீலை மாதம்போல் நான் ஒரு நாள் பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, ஆஜர் எதிரி கோபீஸ்வரன் எங்கள் மருத்துவமனைக்கு வந்து அன்றைய தேதியில் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகள் ஆகியோர்களது விபரம் தொடர்பாக எதிரி கோபீஸ்வரன் தகவல் கோரினார் . அப்போது மருத்துவர் செல்வக்குமரன் அதுகுறித்த விபரங்களை தனிநபருக்கு தர முடியாது என்று கூறினார் . அதன் பிறகு என்ன விபரங்கள் நடந்தது எனக்கு நினைவில்லை. போலீசார் சம்பவம் தொடர்பாக என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு முன்பாக தான் தாண்டிக்குடி – பண்ணைக்காடு செல்லும் சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான் . அந்த சாலை கிழக்கு – மேற்காக செல்லும் சாலை என்றால் சரிதான் . அந்த சாலைக்கு மேற்குபுறம் தான் பண்ணைக்காடு அரசு மருத்துவமனை அமைந்துள்ளது என்றால் சரிதான் . பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் காலை 08.00 முதல் மதியம் 01.00 மணி வரை புறநோயாளிகள் சிகிச்சை நேரமும் , மதியம் 03.00 முதல் 05.00 மணி வரை புறநோயாளிகளுக்காக சிகிச்சை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. புறநோயாளிகள் சிகிச்சை நேரம் முடிந்த பிறகு உள்நோயாளிகள் பிரிவிற்கு மருத்துவர்கள் பணிக்கு செல்வார்கள் என்றால் சரிதான் . மாலை 05.00 மணிக்கு மேல் சிகிச்சைக்கு வரும் புறநோயாளிகள் உள்நோயாளிகள் பிரிவில் பணியில் இருக்கும் மருத்துவரிடம் சிகிச்சைக்கு செல்வார்கள் என்றால் சரிதான் . பண்ணைக்காடு அரசு மருத்துவமனை கட்டிடத்தில் நுழைந்தவுடன் அலுவலகப்பகுதி உள்ளது என்றால் சரிதான். அலுவலகப்பகுதிக்கு அடுத்தாற்போல் X–Ray பிரிவு உள்ளது என்றால் சரிதான் . அதைத்தொடர்ந்து UPS அறை உள்ளது என்றால் சரிதான் . அதைத்தாண்டி பெண்கள் உள்நோயாளிகள் பிரிவுப் பகுதி உள்ளது என்றால் சரிதான்.

ஆண்கள் உள்நோயாளிகள் பிரிவு முதல் தளத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான் . பெண்கள் உள்நோயாளிகள் பிரிவின் முன்புறம் அவசர சிகிச்சை பிரிவு என்று குறிப்பு மட்டும் உள்ளது என்றால் சரிதான். அங்கு அனுமதி பெற்றுதான் உள்ளே வரவேண்டும் என்று வாசகம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மருத்துவமனையில் பெண்கள் உள்நோயாளிகள் பிரிவில் இடதுபுறத்தில் அறிவிப்பு பலகை ஒன்று அமைந்துள்ளது என்றால் சரிதான் . அந்த அறிவிப்பு பலகையில் தினமும் அன்றைய தேதியில் உள்நோயாளி மற்றும் புறநோயாளிகள்

எண்ணிக்கை விபரங்கள் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவ தினத்தன்று எத்தனை உள்நோயாளிகள் சிகிச்சையில் இருந்தார்கள் என்று தற்போது எனக்கு நினைவில்லை. சம்பவம் நடைபெற்ற கிழமை எந்த கிழமை என்று எனக்கு நினைவில்லை . எதிரி அசிங்கமாக பேசியதாக நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரி பணி செய்ய விடமால் தடுப்பதாக போலீசாருக்கு நான் எதுவும் தகவல் தெரிவித்தேனா என்றால் நான் எதுவும் தகவல் தெரிவிக்கவில்லை. போலீசாருக்கு, ஆனந்தபசவன் எதுவும் தகவல் தெரிவித்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு எதுவும் நினைவில்லை. எதிரி அரசு மருத்துவமனையில் எந்தவிதமான அத்துமீறல் செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் , ஆபாசமாக பேசவில்லை என்றாலும் , சிகிச்சைக்கு வந்த எதிரி மீது பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டு , வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் எதிரி மருத்துவரிடம் நோயாளிகளின் விபரம் கேட்டார்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:30:28 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 12/2024**

**வழக்கு சாட்சி PW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பவுன்தாய்** | தொழில் | : நர்சிங் சூப்பிரண்டு |
| தகப்பனார் பெயர் | : ------- | கணவர் பெயர் | : ராஜேந்திரன் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 58/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து நர்சிங் சூப்பிரண்டாக வேலை செய்து வருகிறேன் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான் . மேற்சொன்ன கையெழுத்தை நான் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரி கோபீஸ்வரன் மருத்துவமனை ஊழியர்களிடம் பிரச்சனை செய்ததாகவும் , அதுதொடர்பாக மறுநாள் பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டது தொடர்பாக என்னை சாட்சியாக இருக்கச்சொல்லி கையொப்பம் கேட்டார்கள். பார்வை மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். என்னுடன் எங்கள் மருத்துவமனையைச் சேர்ந்த ஆண் செவிலியர் பிரபாகரன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பகல் 12.00 மணி அளவில் நான் புறநோயாளிகள் பிரிவில் இருந்த சமயத்தில் போலீசார் விசாரணைக்கு வந்தார்கள் . எந்த குற்றம் சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டார்கள் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. என்னிடம் கையொப்பம் பெற்ற பார்வை மகஜரில் என்னென்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று போலீசார் விளக்கிச் சொன்னார்களா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:30:34 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 12/2024**

**வழக்கு சாட்சி PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பிரபாகரன்** | தொழில் | : செவிலியர் |
| தகப்பனார் பெயர் | : தொத்தையன் | கணவர் பெயர் | : ------- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 38/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். தேதி நினைவில்லை . மேற்சொன்ன 2023ம் வருடம் ஜீலை மாதம் போல் மருத்துவர் ஆனந்தபசவனிடம் ஆஜர் எதிரி கோபீஸ்வரன் பிரச்சனை செய்ததாகச்சொல்லி போலீசார் வந்து விசாரணை மேற்கொண்டார்கள். என்ன நடந்தது என்றுக் கேட்டு என்னிடமும், பவுன்தாயிடமும் கையொப்பம் பெற்றுச்சென்றார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி பிரச்சனை செய்ததாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில், பிரச்சனை நடந்த சமயத்தில் நான் மருத்துவமனையில் இருந்தேனா என்றால் இல்லை . நான் மருத்துவமனையில் பிரச்சனை நடந்த சமயத்தில் இல்லாத விபரத்தை போலீசார்

விசாரணையின்போது சொன்னேனா என்றால் சொன்னேன் . போலீசார் எத்தனை மணிக்கு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்று தற்போது எனக்கு நினைவில்லை . நான் கையொப்பம் இட்ட ஆவணத்தில் என்னென்ன விபரங்கள் உள்ளது என்று எனக்கு கொஞ்சம் தான் தெரியும் . எந்த குற்ற எண் தொடர்பாக போலீசார் படம் வரைந்து விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது . போலீசார் மருத்துவமனையின் மொத்த வரைபடத்தையும் வரைந்தார்கள். போலீசார் தயார் செய்த வரைபடத்தில் மருத்துவமனையின் கிழக்கே செல்லும் சாலையை குறிப்பிட்டு வரைபடம் வரைந்தார்களா என்றால் வரைந்தார்கள். அந்த சாலை தாண்டிக்குடி – பண்ணைக்காடு செல்லும் சாலை என்றால் சரிதான். அத்தகைய விபரங்கள் எதுவும் வரைபடத்தில் இல்லை என்றாலும், புகார்தாரர் எனது மேலதிகரி என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:30:44 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.